## இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2014

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

கீழே காட்டப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யக்கூடாத போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலான 12 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 42,968,894 கூட்டுத்தொகையான வங்கி மேலதிகப்பற்று மீதிகள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக நடைமுறைச் சொத்துக்களில் ஈடுசெய்யப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காசாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட வேண்டிய அதேநேரம் ஞாபனக் குறிப்புக்களில் சீராக்கம் மேற்கொள்ளக் கூடாத போதிலும், ரூபா 819,431,527 தொகையான ஒதுக்கங்கள் மற்றும் ரூபா 58,638,240 தொகையான மூலதனச் சொத்துக்கள் மீதான காலக்கழிவு என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் சீராக்கப்பட்டிருந்தன.

(ii) தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் உருவாகாத வருமானம் அதிலிருந்து அகற்றப்பட்டு உரிய செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கடன் வட்டி வருமானமான ரூபா 341,081 தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆண்டினுள் நிலையான சொத்துக்கள் கைதவிர்க்கப்பட்டதால் கிடைத்த ரூபா 5,977,500 தொகையையும் சொத்துக்கள் கைதவிர்த்தல் இலாபம் ரூபா 2,778,629 தொகையையும் நட்டம் ரூபா 826,554 தொகையையும் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கருத்தில்

கொள்ளப்படாதிருந்ததுடன், ரூபா 30,182,688 தொகையான நிலையான சொத்துக்களுக்குரிய சேர்த்தல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 853,416,012 என சீராக்கம் செய்யப்பட்டிருந்தது, இதன் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றின் சமப்படுத்தல் கணக்காய்வின் போது சிக்கல் வாய்ந்ததாக இருந்தது.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வரப்பட்டதுடன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், விற்பனை செய்யும் ஆண்டில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒவ்வொரு சொத்தும் வெவ்வேறாக இனங்கண்டு பெறுமானத்தேய்வு செய்வதற்குப் பதிலாக மொத்த சொத்துக்களின் கொள்விலை அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தனியார் நிறுவனமொன்றினால் தொடரப்பட்ட வழக்கொன்றுக்குரிய வழங்கப்பட்டிருந்த பாதகமான தீர்ப்பின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையான ரூபா 981,115 தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) வெவ்வேறு தரப்பினர்களால் இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்டிருந்த மூன்று வழக்குகள் தொடர்பாக காணப்படும் நிகழத்தக்க பொறுப்புக்கள் ரூபா 3,049,500 தொகை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யாதேனும் குறிப்பான கணக்கீட்டு நடவடிக்கையொன்றிற்காக செயற்படவேண்டிய முறை தொடர்பாக, நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறைமைகள் மேவுகை செய்யப்படாவிட்டால் அங்கு மிகவும் சிறந்த முறைமையின் (Best Practice) பிரகாரம் கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரித்து அது பின்பற்றப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அரச மானியங்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்தொன்றின் நியாயமான பெறுமதி பொருண்மையான அளவில் வேறுபடும் போது அச்சொத்துக்கள் 3 வருடங்களுக்கோ அல்லது 5 வருடங்களுக்கோ ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் 2007 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டின் போது ரூபா 7,697,129 தொகை அறவிடமுடியாக் கடனாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பயன்படு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாமல் ஏனைய சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படும் விகிதம் கணனி இயந்திரங்கள் பெறுமானத்தேய்வு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் மீன் தயாரிப்பு நிலையத்தை உடைத்து அகற்றி அதன் பொருட்களை கையேற்காமல் அதற்காக உரிய ஒப்பந்தக்காரரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 8,800,000 ஆன முழுத் தொகையில் ரூபா 3,800,000 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மானியமாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 824,485,700 பெறுமதியான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படாமை காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 14,458,095 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கொட்பே துறைமுகத்தின் வழுக்கும் வீதி நிர்மாணத்திற்காக செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 8,319,730 தொகை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நிலையான சொத்துக்கள் மற்றும் செலுத்த வேண்டிய செலவினம் என்பன குறைத்துக் காண்பிக்க்பபட்டிருந்தது.

(ஈ) புரானவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் எரிபொருள் இருப்பு குறைவு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த ரூபா 574,739 தொகையை இருப்புக்களிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக கடன்பட்டோரில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு என்பவற்றை குறித்த பயன்பாட்டு பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 471,108 ஆன வேறுபாடு காணப்பட்டது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 4,473,127,854 | விரிவான பட்டோலைகள் |
| எரிபொருள் கடன்பட்டோர் | 54,814,826 | விரிவான பட்டோலைகள் மீதிகளை உறுதிப்படுத்தல் மற்றும் காலப் பகுப்பாய்வு |
| ஏனைய வைப்புக்கள் | 4,509,025 | |

| | | |
|---|---|---|
| பொம்ப் பிரீச்ட் பெறுவனவு | 2,215,769 | விரிவான பட்டோலைகள் |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 1,653,400 | |
| பதிவழிக்கப்பட வேண்டிய மீதிகள் | 81,769,596 | |
| பெறுமதி சேர் வரி | 73,798,069 | |
| வங்கிப் பாதுகாப்பு வைப்புக்கள் | 2,843,310 | |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கொள்வனவிற்காக முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 38,972,543 பெறுமதியில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதிகள் முறையே ரூபா 15,593,826, ரூபா 9,048,319 மற்றும் ரூபா 12,741,341 ஆக இருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ரூபா 10,434,783 தொகைளையும் அமைச்சு மற்றும் ஏனைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ஓராண்டிற்கு மேல் பழைமையான ரூபா 2,150,000 தொகையையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 81,769,596 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத கணக்கு மீதிகள் மற்றும் முற்பணங்கள், ரூபா 93,901,599 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் வைப்பு மீதிகள் என்பவற்றை மீளாய்வாண்டின் போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் துறைமுகங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா 15,879,986 தொகையையும் செலுத்த வேண்டிய பொருளாதார சேவைகள் வரி ரூபா 10,512,971 தொகையையும் மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்தில் நங்கூரம் இட்டிருந்த கப்பல்களிலிருந்து 2009 ஆம் ஆண்டிலிருந்து 2011 யூலை மாதம் வரை அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 5,675,373 ஆன நங்கூரமிடல் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 137(5) | பெற்றுக்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தாமல் 2000 தினக்குறிப்பேடுகளுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 1,090,000 தொகை கொடுப்பனவு செய்ய்பபட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 187 | ரூபா 704,539 பெறுமதியான நாளாந்த வருமானம் வங்கியிலிடப்படாமல் நாளாந்தம் செலவிடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 05 வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 996,450 கூட்டுத்தொகையான 49 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 757 (2) | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 5,161 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், ரூபா 50 மில்லியன் பெறுமதியான கணனிகள் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 06/97 ஆம் இலக்க சுற்றறிக்கை | பதில் கடமை படிகள் செலுத்த வேண்டிய ஆகக்கூடிய காலம் மூன்று மாதங்களாக இருந்த போதிலும், அந்த எல்லைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் 06 பேருக்காக பதில் கடமை படிகளாக மீளாய்வாண்டில் ரூபா 777,429 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | இலங்கை பொறியியலாளர் சேவைக்குரிய உத்தியோகத்தர்களுக்காக உரித்தான ரூபா 15,000 ஆன படிகள் அங்கீகாரமொன்று இல்லாமல் 07 கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,155,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதி 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் 08 வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது செலுத்த வேண்டிய மாதாந்த எல்லையை மிகைத்து ரூபா 380,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | நிரந்தர, தற்காலிக, அமைய, சமயா சமய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சட்ட மதியுரையாளர், பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மதியுரையாளர் போன்ற பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டு முறையே பிரதி பொது முகாமையாளருக்காக 2014 சனவரி மாதம் முதல் ரூபா 50,000 வீதம் ரூபா 600,000 தொகையும் நிதி மதியுரையாளருக்காக 2014 நவம்பர் முதல் மாதாந்தம் ரூபா 90,000 வீதம் ரூபா 180,000 தொகையும் சட்ட மதியுரையாளருக்காக 2014 யூலை மாதம் முதல் மாதாந்தம் ரூபா 60,000 வீதம் ரூபா 300,000 தொகையும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 ஆம் பிரிவு | ஆகக் குறைந்தது மூன்று வழங்குனர்களிடமிருந்தாவது கூறுவிலை பெற்றுக் கொள்ளாமல் கிரிந்த மீன்பிடி துறைமுகத்தின் சந்தகலபியச சுற்றுலா விடுதிக்கு ரூபா 122,399 பெறுமதியான வாயுச்சீராக்கி இயந்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (எ) | 2011 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | முகாமைத்துவ பணிப்பாளருக்கு செலுத்தப்படுகின்ற ரூபா 40,000 தொகையான மாதாந்த படிக்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 30,000 வீதம் 2014 ஏப்ரல் முதல் திசெம்பர் வரை ரூபா 270,000 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. |

### 2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் புதிய மீன்பிடிக் கப்பலொன்றை வெள்ளோட்டமிடும் விழாவிற்காக கொள்வனவு வழிகாட்டலில் இருந்து விலகியும் பணிப்பாளர் சபை அங்கீகாரமொன்று இல்லாமலும், மேடை உட்பட ஏனைய பொருட்கள் வழங்கியதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 2,093,160 தொகை கொடுப்பனவு உட்பட ரூபா 3,769,509 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 136,861,294 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 41,511,370 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 95,349,924 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 205,400,000 ஆல் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 250,495,530 ஆல் குறைவடைந்தமை மற்றும் பதவியணிக்கான செலவினம், திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச்

செலவினம் என்பன முறையே 26,864,261 ஆலும் ரூபா 17,015,879 ஆலும் அதிகரித்திருந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படுத்தப்படும் 21 மீன்பிடித் துறைமுகங்களில் 14 துறைமுகங்கள் மீளாய்வாண்டில் செயற்பாட்டு நட்டத்தினை அடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் ஒவ்வொரு துறைமுகத்திலும் இலாப நட்ட நிலைமைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் நட்டமீட்டியிருந்த 14 துறைமுகங்களில் 10 முன்னைய ஆண்டிலும் நட்டத்தையே ஈட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஈட்டப்பட்டிருந்த நட்டத்தின் கூட்டுத்தொகை ரூபா 97,234,283 ஆக இருந்தது. அதில் தங்காலை, தொடன்தூவ, ஹிக்கடுவை, கற்பிட்டிய மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 05 துறைமுகங்களில் நட்டம் முன்னைய 05 ஆண்டுகளிலும் அதிகரித்துக் காணப்பட்டன. மேலும் சிலாபம், வாழைச்சேனை மற்றும் நில்வெல்ல ஆகிய துறைமுகங்கள் 03 வருடங்கள் தொடர்ச்சியாக நட்டமடைந்து இருந்தன.

(ii) பேருவல, காலி, மிரிஸ்ஸ மற்றும் முகத்துவராம் ஆகிய நான்கு மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாட்டு இலாபம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

(iii) நட்டமீட்டும் துறைமுகங்களில் நட்டம் ஏற்படுவதற்கு காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டு இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டு வருதல் அல்லது நட்டத்தைக் குறைத்துக் கொள்ளல் மற்றும் இலாபம் குறைவாக காணப்படும் துறைமுகங்களில் அதனை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடைமுறைகளை இனங்கண்டு அதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் துறைமுகங்களில் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 73 சதவீதத்தை உழைத்த முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகம் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி முதல் முறையற்ற விதத்தில் மாதமொன்றுக்கு ரூபா 125,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இழக்கப்பட்ட இலாபம் ரூபா 7.6 மில்லியனாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குரிய கெட்டபிலர் இயந்திரமொன்றின் பிரதான என்ஜினைத் திருத்தியமைப்பதற்காக 2006 அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளிலிருந்து விலகி ரூபா 5,911,995 ஆன உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு வழங்குனர் நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையில் முற்பணமாக ரூபா 1,055,713 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது 06 எண்ணெய்த் தாங்கிகளை அமைக்கும் செயற்பாட்டிற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளினை விஞ்சி 60 சதவீத முற்பணமாக ரூபா 3,000,000 தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. குறித்த செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கோ அல்லது நட்டத்தை அறவிடுவதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கிவல்லை.

(இ) அரச விலை மதிப்பாளரின் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளாமலும், உடன்படிக்கையொன்று இல்லாமலும் பாணந்துறை மீன்பிடி துறைமுகத்திற்குச் சொந்தமான ஆதனங்களின் பகுதியொன்று ரூபா 150,000 ஆன மாதாந்த குத்தகைத் தவணைக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் 1996 மே 08 ஆந் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவர், நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் அரச கடமைகளை நிறைவேற்றாமை தொடர்பாக 06 சந்தர்ப்பங்களில் எழுத்துமூல எச்சரிக்கைக்கு உட்பட்டிருக்கையிலும் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திராத போதும் முறையற்ற விதத்தில் I ஆந் தர எழுதுனராக பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் 2011 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய 1/5/1/1/8Min(ii) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த நியமனம் சட்டவிதிகளுக்கு முரணாக இருந்ததால் உத்தியோகத்தரின் கல்வித் தகைமைகளுக்கேற்ப வழங்கக்கூடிய வேறொரு பதவியொன்றுக்கு நியமிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அக்கட்டளை கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களால் பின்பற்றப்பட்ட வெளிவாரி பாடநெறிகளுக்காக ரூபா 982,150 தொகை கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பாடநெறிகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதில் வெளிப்படையான தன்மையொன்று அவதானிக்கப்பட்டிராததுடன் அந்த உத்தியோகத்தர்களது கடமைசார் தேவைப்பாட்டிற்காக பாடநெறிகள் பொருத்தமானதா என்பது கருத்தில் கொள்ளப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஊ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி மேலதிகப் பற்று எல்லை ரூபா 25 மில்லியனாக இருந்த போதிலும், ஒரு வங்கிக் கணக்கிற்காக அந்த எல்லையை விஞ்சி ரூபா 27 மில்லியன் வரை வங்கி மேலதிகப்பற்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2013 மற்றும் 2014 கணக்காண்டுகளுக்கு உரித்தாக தொடர்புபடுத்தப்பட்ட முறையே 22 மற்றும் 21 கணக்காய்வு ஐயவினாக்களிற்காக 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அக்கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 222,271,550 ஆக இருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தகங்களின் பிரகாரம் இருக்க வேண்டிய எரிபொருள் இருப்பு பௌதீகரீதியான எரிபொருள் இருப்புடன் ஒப்பிடும் போது ரூபா 5,584,489 ஆன எரிபொருள் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் முகாமைத்துவத்தினால் அதற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கடன் உதவியின் கீழ் ரூபா 224 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ள சிலாபம் மீன்பிடி துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கை 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை மீன்பிடித் துறைமுகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து ரூபா 5,951,350 ஆன நட்டமொன்று அடைந்திருந்ததுடன், அதன் பிரகாரம் வெளிநாட்டு கடன் கொடுப்பனவு மற்றும் அதற்குரிய வட்டிக் கொடுப்பனவு என்பன அரசிற்கு செலவினப் பொறுப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலன்கொடை, வாழைச்சேனை, சிலாபம், கிரிந்த பாணந்துறை, ஹம்பாந்தோட்டை மற்றும் ஹிக்கடுவை ஆகிய மீன்பிடி துறைமுகங்களில் சேரும் மணலை அகற்றுவதற்கான ஒப்பந்தம் 2011 நவம்பர் 24 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவது பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2011 திசெம்பர் 13 மற்றும் 2012 சனவரி 09 ஆந் திகதிகளில் அனைத்து துறைமுகங்களிலும் மணலை அகற்றுவதற்காக அங்கீகாரமொன்று இல்லாமல் ஒரே நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தை வழங்கும் போது குறித்த நிறுவனத்தின் செயலாற்றல் மற்றும் இயலுமை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாததன் காரணமாக உரிய நிறுவனத்தினால் மீன்பிடி துறைமுகங்களில் மணல் அகற்றுவது தாமதமடைந்திருந்தது, அக்காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக மேலும் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்தினால் அத்தனியார் நிறுவனத்திற்கு அகழ்ந்தெடுக்கும் மணல் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 335,000 தொகை உரிய நிறுவனத்தினால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய போதிலும், அத்தொகை கணக்காய்வு திகதியான 2015 யூலை 17 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) மேலும் அத்தனியார் நிறுவனத்திற்கு 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ரூபா 20 மில்லியன் முற்பணம் அந்நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் செலுத்தப்பட்டிருந்ததுடன், இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கூட்டுத்தாபனத்திடம் மணல் அகற்றுவதற்காக பயன்படுத்தப்படக்கூடிய ரூபா 374,000,000 பெறுமதியான Cutter Suction வகையிலான 03 டிரேஜர்களும் ரூபா 1,069,535,760 பெறுமதியான Grab Hopper வகையிலான 02 டிரேஜர்களும் இருக்கும் போது 07 மீன்பிடி துறைமுகங்களில் மணல் அகற்றும் செயற்பாட்டை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கியமையால் கூட்டுத்தாபனத்திற்குரிய அரச வளங்கள் விளைவற்ற வகையில் வைத்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கிரிந்த துறைமுகத்தில் சேரும் மணல் அகற்றுதல் மற்றும் விற்பனை என்பவற்றிற்கு கூட்டுத்தாபனத்தினால் 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாமல் மீண்டும் அத்துறைமுகங்களில் மணலை அகற்றுவதற்கும் விற்பனை செய்வதற்கும் 2015 யூன்

30 ஆந் திகதி வேறொரு தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூன் 15 ஆந் திகதி அந்நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் 02 ஆவது நிபந்தனையின் பிரகாரம் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அந்நிறுவனத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 200,000 முற்பணமாக் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அப்பணம் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீர்கொழும்பு களப்பு கடற்கரை அபிவிருத்தி விழாவிற்காக நினைவு பதாகையொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 1,848,000 இற்கு கையளிக்கப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 1,000,000 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. நினைவுப் பதாகை நிர்மாணிக்கும் திட்டத்தின் பிரகாரம், கருங்கற்களினால் செதுக்கப்பட்ட மீனொன்றின் உருவம் வடிவமைக்கப்பட வேண்டிய போதிலும், சீமெந்தினால் தயாரிக்கப்பட்ட மீனொன்று வடிவமைக்கப்பட்டிருந்தமை 2014 பெப்ரவரி 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 6,229,440 இற்கு 06 எரிபொருள் பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், குறித்த வழங்குனருக்கு பணக் கொடுப்பனவின் போது 06 எரிபொருள் பம்பிகளை குறித்த மீன்பிடி துறைமுகங்களில் நிறுவியதன் பின்னர் பணம் செலுத்துவதற்குப் பதிலாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பிரகாரம் பகுதி பகுதியாக பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக வழங்குனரால் எரிபொருள் பம்பிகளை நிறுவும் போது தாமதிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் எரிபொருள் பம்பிகள் பயன்பாட்டிற்குப் பொருத்தமானது என்ற பரிந்துரையொன்று இல்லாததன் காரணமாக ஓராண்டு காலம் கடப்பதற்கு முன்னர் பழுதடைந்து காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டில் விபத்திற்குட்பட்ட வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த மோட்டார் வண்டியைப் பயன்படுத்த முடியாதென பரிந்துரைத்து காப்புறுதி கம்பனியால் ரூபா 3,500,000 தொகையான இழப்பீட்டை வழங்குவதற்கு பரிந்துரைத்திருந்த போதிலும், இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ளும் போது குறித்த விபத்து இடம்பெற்ற போது கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீதியான ரூபா 1,712,510 தொகைக்குப் பதிலாக குத்தகை கம்பனியால் ரூபா 2,227,100 தொகை இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சிக்கலாக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திடமிருந்து ரூபா 514,590 தொகை கூடுதலாக குத்தகை கம்பனியால் அறவிடப்பட்டிருந்தது.

(இ) நீர்கொழும்பு களப்பு கடற்ரை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக முறையான கொள்வனவு செயற்பாடுகளிலிருந்து விலகி ரூபா 1,225,000 கிரயத்திலான 1500 ரீ சேட் மற்றும் 2000 தொப்பிகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இப்பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்படாமல் குறித்த தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நீர்கொழும்பு கடற்கரை அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய களப்பு கடற்கரை அபிவிருத்தி ஆரம்ப விழாவிற்கான செலவினம் ரூபா 13,270,000 இற்கு மதிப்பிடப்பட்டு கொள்வனவு செயற்பாடுகளுக்கு புறம்பாக தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 5,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவ்விழா நடாத்தப்பட்டதை உறுதிப்படுத்தக்கூடிய எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்**

2013 திசெம்பர் 19 ஆந் திகதி கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சிற்கு உரித்தாக இருந்த ரூபா 4,000,000 பெறுமதியான ஜீப் வண்டிக்கு கூட்டுத்தாபனத்தினால் திருத்த வேலைகளுக்காக ரூபா 652,189 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2014 ஏப்ரல் 17 ஆந் திகதியின் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.10 ஆம் பந்திக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக மேலதிகப்பற்று வட்டி ரூபா 6,485,293 தொகையும் ரூபா 31,966 ஆன தண்டப்பணமும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) குறித்த திகதியில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 8,357,906 ஆன மிகை கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்துடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரை மிகைத்து 128 ஊழியர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) வருடாந்தம் ரூபா 3,005,880 ஆன சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்யப்படும் இரண்டு சட்ட உத்தியோகத்தர்கள் உட்பட 07 பேர் சட்டப் பிரிவில் இருக்கும் போது சட்ட ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வெளித்தரப்பினருக்கு ரூபா 1,154,660 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.8 வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களை வரிசை அமைச்சிற்கோ அல்லது வேறு நிறுவனமொன்றிற்கு விடுவிப்பதாயின் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 17 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வெளிநிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 7,318,140 தொகை சம்பளம் மற்றும் வேதனங்களாகச் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் வரிசை அமைச்சினதோ அல்லது வேறு அரச நிறுவனங்களுக்குரிய செலவினங்களை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி இல்லாத போதிலும், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தியமைப்பதற்காக ரூபா 440,395 தொகையும் அமைச்சிற்காக 1000 ரீ சேட்கள் கொள்வனவிற்காக ரூபா 600,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இலாபமீட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அக்காலப்பகுதியில் நட்டம் அடைந்திருந்தது. இந்நிலைமையின் கீழ் அச்சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக தாமதமில்லாமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் மேல்மட்ட முகாமைத்துவத்தினால் ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்காமை

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமானக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) பதவியணியினர் நிர்வாகம்
(ஊ) கொள்வனவு நடைமுறை